ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு)

(மலர் – 31) Sep (2) / 2008

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு

உட்பொதிவு

1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………..3

2. ஸ்ரீபாஷ்யம் ……………………………………………………………...11

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………………..15

4. முமுக்ஷுப்படி ……………………………………………………………19

5. திருக்குறுந்தாண்டகம்……………………..……………………………26

6. திருமாலை ………………………………………………………………..32

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 8)

9. பரமம் யோ மஹத்தேஜ: பரமம் யோ மஹத்தப:
பரமம் யோ மஹத்ப்ரஹ்ம பரமம் ய: பராயணம்

10-1. பவித்ராணாம் பவித்ரம் யோ மங்களாநாம் ச மங்களம்

தேஜ: - ய: என்னும் ஆண் பாலுடன் தேஜ: என்னும் அஃறிணையைக் குறிக்கும் சொல் இணைந்து வந்தது கண்டு வியக்கக்கூடாது. இங்கு புண்டரீகாக்ஷன் என்ற பதத்துடன் பல்வேறு சொற்களை இணைப்பதே குறிக்கோளாகும். இது இலக்கண ரீதியாகவும் சரியே ஆகும். உதாரணமாக, வேத: ப்ரமாணம் - வேதமே ப்ரமாணங்கள், தத்வம் நாராயண: பர: -- நாராயணனே உண்மை – என்ற வரிகள் காண்க. முதலாவது வரியில் எண்ணிக்கை வேறுபாடு உள்ளது காண்க. அதாவது, வேத: என்பது பன்மை, ப்ரமாணம் என்பது ஒருமையாகும். இரண்டாவதில் பால் வேற்றுமை உள்ளது. தத்வம் என்பது பால் அற்ற சொல், நாராயண என்பது ஆண்பால் ஆகும். இந்த வரிகள் எப்படிச் சேர்ந்தனவோ அது போன்றே ய: தேஜ: என்ற வரியும் உள்ளது. எம்பெருமானே பரமபுருஷன், அவன் அனைவரையும் வசப்படுத்துபவன், அவனே உயர்ந்த புருஷார்த்தம் என்பதை அவனது ஆறு குணங்கள் விளக்குகின்றன. அவையாவன:

- தேஜ: - ஒளிமயமானவன். அதாவது ஞானமயமானவன், மற்றவர்களையும் ஒளி வீசும்படிச் செய்பவன். சாந்தோக்ய உபநிஷத் (8-12-2) – பரம் ஜ்யோதி உபஸம்பத்ய – அந்தப் பரம் ஜ்யோதியை அடைந்து; தைத்திரீய உபநிஷத் – தஸ்ய ஆதித்யோ பாமுபயுஜ்ய பாதி -அவனை அடைந்து, அவனிடம் இருந்து பெற்ற ஒளி கொண்டு, சூரியன் ஒளிர்கிறான் – என்று கூறின.

- மஹத் - மஹத் என்றால் எல்லையற்றதாக அவனது தேஜஸ் உள்ளது.

- பரம் - அவனை ஒத்தவர்களோ மிக்கவர்களோ இல்லை.

- தபஸ: - அனைத்திற்கும் உத்தரவு இட்டு நியமிக்கிறான். நாராயணஸூக்தம் – யோ தேவேப்ய ஆதபதி - தேவர்களுக்காக தனது ஆளும் தன்மையை வெளிப்படுத்துகிறான்; ஸ்வேதாஸ்வதர உபநிஷத் – தம் ஈச்வராணாம் பரமம் மஹேச்வரம் – மஹேச்வரனாக உள்ள ஈச்வரன்; ப்ருஹத் உபநிஷத் - ஏஷ ஸர்வேச்வர: - அவனே அனைத்துக்கும் ஈச்வரன்.

- ப்ரஹ்ம – எல்லையற்ற, எண்ணற்ற குணங்களைக் கொண்டுள்ளதால் மிகவும் உயர்ந்த ப்ரஹ்மம் ஆகிறான். தனது வலிமையால் மற்றவர்களையும் உயர்த்துகிறான்.

- பவித்ரம் – இது கீழே விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

எம்பெருமானின் தொடர்பு அனைத்து தோஷங்களையும் நீக்குகிறது

பவித்ரம் - தூய்மையானவற்றுள் தூய்மையானது. இங்கு பரமம் மற்றும் மஹத் ஆகிய பதங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். அவனே அனைத்தையும் தூய்மைப்படுத்துகிறான் என்கிறது. தூய்மைப்படுத்துதல் என்றால் தோஷங்களை நீக்குவதாகும். ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய குணங்களில் ஏற்படும் மாறுபாடு காரணமாக, அசேதநங்களில் தோஷம் உண்டாகிறது. இப்படிப்பட்ட அசேதநங்களின் தொடர்பு காரணமாகச் சேதனங்களுக்கும் தோஷம் உண்டாகுகிறது. அறியாமை, எம்பெருமானுக்கு எதிராகச் செயல்படுதல், பற்றுதல், வெறுப்பு போன்றவை தோஷங்கள் ஆகும். இவை போன்ற தோஷங்களுக்கு எதிர்த்தட்டாக எம்பெருமான் உள்ளதால், இத்தகைய தோஷங்களை முழுமையாக அழிக்க வல்லவனாக அவன் உள்ளான். அவன் தூய்மையானவற்றில் தூய்மையாவான். இதனைக் கீழே உள்ள பல சாஸ்த்ர வரிகள் உணர்த்துகின்றன.

- தைத்திரீய உபநிஷத் – ஏதம் ஹ வா வ ந தபதி – அவனைத் துன்பங்கள் சூழ்வதில்லை.
- சாந்தோக்ய உபநிஷத் (4-14-3) – தத யதா புஷ்கரபலாச வ்யாபோ ந ச்லிஷ்யந்தே - தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாமல் உள்ளது போன்று (அவனை அடைந்தவர்களிடம் தோஷம் ஒட்டுவதில்லை).
- சாந்தோக்ய உபநிஷத் (5-24-3) – தத் யதா இஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத - நெருப்பில் இடப்பட்ட பஞ்சு எறிவது போன்று (அவனை அடைந்தவர்களின் பாவங்கள் எரிந்து விடுகின்றன).
- கௌஷீதகீ உபநிஷத் (1-4) – தத் ஸக்ருததுஷ்க்ருதே தூநுதே – (அவனை அடைந்தவன்) தனது பாவ புண்ணியங்களை உதறுகிறான்.
- முண்டக உபநிஷத் (3-1-3) – ததா வித்வாந் புண்யபாபே விதூய: - புண்ணிய பாவங்களை நீக்கிய வித்வான் ஒருவன்.

- யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி (34) – க்ஷேத்ரஜ்ஞஸ்ய ஈச்வர ஞானாத் விசுத்தி: பரமா மதா - எம்பெருமானைப் பற்றிய ஞானம் என்பதே ஆத்மாவுக்கு உயர்ந்த தூய்மையை அளிக்கிறது.
- தக்ஷ ஸ்ம்ருதி – த்யாயேந் நாராயணம் தேவம் ஸ்நாநாதிஷு ச கர்மஸு ப்ராயச்சித்திர் ஹி ஸர்வஸ்ய துஷ்க்ருதஸ்யேதி வை ச்ருதி: - நீராடும் செயல் உட்பட அனைத்து செயல்களின்போதும் நாராயணனைத் த்யானிக்க வேண்டும்.
- ஸ்ரீமத் பகவத் கீதை (10-3) – யோ மாம் அஜம் அநாதிம் ச – யார் என்னை பிறப்பற்றவன், எல்லையற்றவன் என்று அறிகிறானோ.
- இராமாயணம் உத்தரகாண்டம் (82-9) – பாவந: ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந: - ரகு வம்சத்தின் பிரியமானவனே! அனைத்து உலகையும் நீயே தூய்மையாக்க வல்லவன்.
- விஷ்ணு புராணம் (2-6-39) – ப்ராயச்சித்தாநி அசேஷாணி இத்யாதி ப்ராயச்சித்த ப்ரகரணம் காத்ஸ்ந்யேந – கண்ணனின் நினைவேஅனைத்து ப்ராயச்சித்தமும் ஆகும்.
- விஷ்ணு புராணம் (6-7-74) – யதா அக்னி: உத்தசிக: கக்ஷம் வஹந்தி ஸாநில: ததா சித்தஸ்திதோ விஷ்ணு: யோகிநாம் ஸர்வ கில்பிஷம் – காற்றுடன் இணைந்த அக்னி எவ்விதம் வைக்கோலை எறிக்கிறதோ அது போன்று யோகிகளின் மனதில் விஷ்ணு புகுந்து, அனைத்துப் பாவங்களையும் அழிக்கிறான்.

புண்ணியமான பொருள்களின் தூய்மை என்பது அவை எம்பெருமானுடன் கொள்ளும் தொடர்பால் ஆகும்

புண்ணிய தீர்த்தம் முதலான தூய்மைப்படுத்தவல்ல வஸ்துக்களின் தூய்மைபடுத்தவல்ல தன்மை என்பது, அவை எம்பெருமானுடன் கொண்டுள்ள தொடர்பால் ஆகும். இந்தக் கருத்தை பரமம் மற்றும் மஹத் ஆகிய பதங்கள் உணர்த்துகின்றன.

இயற்கையாகவே அசுத்தமாக உள்ள அசேதனங்களும், ஏதோ ஒரு தோஷத்தால் பாதிக்கப்பட்ட தேவர்களும் மற்றவர்களைத் தூய்மைப்படுத்த வல்லவர்கள் என்று கூறுவது சரியல்ல. இந்தக் காரணத்தினால்தான் பராசரர், ஸௌனகர் முதலானவர்கள் தங்களது நூல்களில் மற்ற தேவர்களைப் பின்பற்றுவதும், ஆராதிப்பதும் கூடாது என்று தடுத்தனர். இவர்களின் இந்தக் கருத்து, இவர்களது சுபாச்ரயத்தை பற்றிய இடங்களில் காணலாம். சுபாச்ரயம் என்பது த்யானிக்கத் தகுந்தது, மங்களம் நிறைந்தது, எளிதில் அண்டவல்லது என்னும்படியான வஸ்துவாகும். விஷ்ணு புராணம் (6-7-77) - அசுஸ்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவாத்யா: கர்யயோநய: - அனைத்து தேவர்களும் கர்மத்தால் பிறந்தவர்கள் என்பதாலும், கர்ம வசப்பட்டவர்கள் என்பதாலும் அவர்கள் தோஷம் நிறைந்தவர்கள் ஆவர் - என்கிறது. விஷ்ணுதர்மம் (104-23) - ஆப்ரஹ்மஸ்தம்பர் யந்தா: ஜகத் அந்தர்வ்யவஸ்திதா: - ப்ரம்மன் தொடங்கி புல் பூண்டுவரை உள்ள அனைத்தும் கர்மத்தால் உண்டானவை, அவை ஸம்ஸாரப் பிடியில் உள்ளன - என்றது.

எம்பெருமானின் திருவடிகளைக் கழுவிய நீரை உட்கொள்வதாலும், அவனுக்குக் கைங்கர்யம் செய்வதாலும் மட்டுமே தேவர்கள் தூய்மை அடைகின்றனர். இது போன்று புண்ணிய தீர்த்தங்களும், திவ்ய தேசங்களும் எம்பெருமானின் தொடர்பு காரணமாகவே தூய்மையாக்கவல்ல தன்மையைப் பெறுகின்றன. விஷ்ணு புராணம் (4-4-30) - விஷ்ணுர் ஆயதனம் ஹி ஆப: ச ஹி ஆயபாம் பதிர்ருச்யதே – விஷ்ணுவின் திருவடிகளில் இருந்து பெருகிய நீர் என்பதால் மட்டுமே கங்கைக்கு பெருமை – என்றது. அவனே தண்ணீரின் பதி எனப்படுகிறான்.

இது போன்று காலம் என்பது அவனுடன் கொண்ட தொடர்பு காரணமாகத் தூய்மை பெறுகிறது. இது எப்படி என்றால் - அவன் அவதரித்த காலம் என்பதாலும்; அவனைத் தன்னுடைய அபிமானத் தேவதையாகக் கொண்டதாலும்; த்வாதசி, ஜயந்தி, ச்ரவணம், முதலிய அவன் விழித்திருக்கும் நாள்கள், அவதரித்த நாள், உறங்கும் நாள்கள் என்றும் கூறிப்பதால் ஆகும். மேலும் ஆத்ம குணமானது அவனைப் பற்றி அறிவதற்கு உதவுவதால் அவையும் தூய்மை அடைகின்றன.

யாகங்கள், தவங்கள், ச்ரத்தை முதலானவை அவனது ஆராதனைகளாக உள்ளதால் அவையும் தூய்மைப்படுத்தவல்லவை ஆகும். அவனைப் புகழ்கின்ற வேதங்களைக் கற்று ஓதும் அதிகாரம் உள்ளதால் அந்தணர்கள் தூய்மை அடைகின்றனர். மஹாபாரதம் – விஷ்ணும் க்ராந்தம் வாஸுதேவம் விஜாநந் விப்ரோ விப்ரத்வம் ஆப்நுயாத் தத்வ தர்சி - இந்த உலகம் அனைத்திலும் வாசுதேவன் வியாபித்துள்ளான் என்றும், தனது திருவடியால் முழுவதுமாகக் கடந்துள்ளான் என்றும் உள்ள உண்மையை அறிகின்ற அந்தணனே உண்மையான அந்தணன் ஆவான் - என்றது. வேதங்கள் மற்றும் ஸ்ம்ருதிகள் அவனது கட்டளைகளாக இருப்பதாலும், அவனையே பரதத்வம் என்று அறிவதாலும் தூய்மையாக்கவல்லதாக உள்ளன. ஸ்ரீமத் பாகவதம் (2-5-15) – நாராயணபரா வேதா: - வேதங்கள் நாராயணனுக்காகவே உள்ளன – என்றும், ச்ருதி ஸ்ம்ருதி மம ஏவ ஆஜ்ஞா - ச்ருதியும், ஸ்ம்ருதியும் எனது கட்டளைகள் – என்றும் உள்ளது காண்க. எம்பெருமான் வாசம் செய்வதால், கோயில்கள் புண்ணியமான இடங்களாகவும், தூய்மைப்படுத்தவல்ல இடங்களாகவும் உள்ளன.

இதனை மஹாபாரதம் கூறுகிறது – புண்ணிய த்வாரவதி – துவாரகா புண்ணியமானது – என்று தொடங்கி, (88-24) - ஆஸ்தே ஹரிரசிந்த்யாத்மா தத்ர ஏவ மதுஸூதந: தத் புண்யம் தத்பரம் ப்ரஹ்ம தத் தீர்த்தம் தத் தபோவனம் - சிந்தனைக்கு அப்பாற்பட்டவன், மது என்ற அரக்கனை அழித்தவன் ஸ்ரீஹரி; அந்த இடம் தூய்மையானது, அங்கு புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன – என்று முடிக்கப்பட்டது. இப்படியாக ஓர் இடத்தின் தூய்மை என்பது, எம்பெருமானின் தொடர்பு உள்ளதால் மட்டுமே ஆகும். இதனை மஹாபாரதம் (88-26) - பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம் பரம் உச்யதே புண்யாநாமபி புண்ய: அஸௌ இதி ஏவம் ஏவ ஸ்பஷ்டம் நிகம்யதே – கோவிந்தனே தூய்மையான அனைத்திலும் தூய்மையானவன், புண்ணியமான அனைத்திலும் புண்ணியமானவன் என்று தெளிவாக உரைக்கப்பட்டது – என்று கூறியது.

எம்பெருமானின் விரும்பத்தக்க ஸ்வரூபம்

இவனே அனைத்திலும் விரும்பப்படுபவனாக உள்ளான். நறுமணம் வீசும் மாலைகள், சந்தனக்குழம்பு, தேவலோகப் பெண்கள், அம்ருதம் ஆகிய அனைத்தைக் காட்டிலும் விரும்பப்படுபவனாக உள்ளான். ஸம்ஸார தோஷங்கள் நீங்கப் பெற்றதாகவும், ஆனந்தமயமாக உள்ளதாகவும், ஞானமயமாக உள்ளதாகவும், தூய்மையாக உள்ளதாகவும், எல்லையற்றதாக உள்ளதாகவும் இருக்கின்ற ஆத்மாவைக் காட்டிலும் விரும்பப்படுபவனாக இவனே உள்ளான். மங்களங்கள் அனைத்தைக் காட்டிலும் மங்களமாக இவன் விரும்பப்படுவதால், மங்களானாம் ச மங்களம் எனப்பட்டது. இந்தக் காரணங்களால் இவனே அடையப்படும் உயர்ந்த இலக்காக உள்ளான். இதனைக் குறித்து பின்னர் விளக்கப்படும்.

ய: ஏவம் ஸ: பரமம் பராயணம் – இப்படிப்பட்ட ஒரு பரமபுருஷன் அடையப்படும் இலக்காக இருப்பது பொருத்தமே ஆகும். இதனை இந்த வரி மிகவும் தெளிவாகக் கூறுகிறது. இந்த வரியின் மூலம் இத்தகைய கருத்தே சாஸ்த்ரங்களில் உள்ளது என்று உணரலாம்.

...தொடரும்

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமாநுஜர் அருளிச் செய்த

ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 31)

பூர்வபக்ஷம் - கடந்த சூத்திரத்தில் ப்ரஹ்மத்திற்கு வசித்வம் போன்ற தன்மைகள் உள்ளன என்று கூறப்பட்டதிலிருந்து, ப்ரஹ்மத்திற்கு ஸத்யகாமத்வம் போன்ற தன்மைகளும் அறியப்படுகின்றன எனக் கூறப்பட்டது. இதனை ஏற்க இயலாது - காரணம், ப்ரஹ்மத்திற்கு வசித்வம் போன்ற குணங்கள் இல்லை என்பதை வாஜஸநேயக உபநிஷத்தே கூறுகிறது. இப்படிப்பட்ட குணங்கள் உபாஸனைப் பொருளாக உள்ள ப்ரஹ்மத்திற்கு இல்லை என்பதை, ப்ரஹ்மம் குணங்கள் அற்றது என்று கூறப்படும் வரி மூலமாக அறியலாம். இந்த வரியானது ப்ருஹத் உபநிஷத்தில் (4-4-19, 20) – மநஸா ஏவ அநுத்ரஷ்டவ்யம் ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யும் ஆப்நோதி ய இஹ நாநேவ பச்யதி ஏகத் ஏவ அநுத்ரஷ்டவ்யம் ஏதத் அப்ரமேயம் – இதனை மனதினால் மட்டுமே பார்க்க வேண்டும்; இங்கு ஒன்றைக் காட்டிலும் பலவாக ஏதும் இல்லை, பல வஸ்துக்கள் இருப்பதாகக் காண்பவன், ஸம்ஸாரத்திலிருந்து மீண்டும் ஸம்ஸாரம் அடைகிறான்; இது நித்யம் – என்று உள்ளது. இதனைத் தொடர்ந்து ப்ருஹத் உபநிஷத் (4-4-22) - ஸ ஏஷ நேதி நேத்யாத்மா - இது ஆத்மா, அது அல்ல, அது அல்ல – எனப்பட்டது. ஆகவே வசித்வம், ஸ்தூலத்வம் போன்ற தன்மைகள் ஏதும் ப்ரஹ்மத்திற்கு இல்லை என்றே ஆகிறது. இது போன்றே, சாந்தோக்ய உபநிஷத்தில் படிக்கப்பட்ட ஸத்யகாமத்வம் போன்ற பலவும், ப்ரஹ்மத்திடம் உள்ள குணங்கள் அல்ல என்பதும் புலப்படுகிறது. எனவே, மோக்ஷத்தின் காரணமாகச் செய்யப்படும் உபாஸனத்தின்போது, அந்தக் குணங்கள் கைவிட வேண்டியவை என்று கருத்து. இதற்கான பதில் அடுத்து சூத்திரத்தில் உள்ளது.

3-3-39 ஆதராத் அலேப:

பொருள் - ஆதாரம் உள்ளதால் கைவிடப்படவேண்டியவை அல்ல.

ஸித்தாந்தம் - (கடந்த சூத்திரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) - இந்த வாதம் பொருந்தாது. இவை ப்ரஹ்மத்திற்கு உள்ள குணங்கள் என்பதையும், மோக்ஷ உபாஸனையில் கைக்கொள்ளப்பட வேண்டிய குணங்கள் என்பதையும் கீழே உள்ள இரண்டு சாந்தோக்ய உபநிஷத் வரிகள் மூலமாகவும், ப்ருஹத் உபநிஷத் வரி மூலமாகவும் அறியலாம்:

- சாந்தோக்ய உபநிஷத் (8-1-1) – தஸ்மிந் யத் அந்த: தத் அந்வேஷ்டவ்யம் - ப்ரஹ்மத்தின் உள்ளே இருக்கும் குணங்கள் தேடப்பட்டு, உபாஸிக்கப்பட வேண்டும்.

- சாந்தோக்ய உபநிஷத் (8-1-5) - ஏஷ ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோகோ விஜிகத்ஸ: அபிபாஸஸ் ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: - பரமாத்மா பாவங்கள் அற்றவன், கிழத்தன்மை இல்லாதவன், மரணம் அற்றவன், துன்பம் அற்றவன், பசி அற்றவன், தாகம் அற்றவன், ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன்.

- ப்ருஹத் உபநிஷத் (4-4-22) - ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந் ... ஏஷ ஸர்வேச்வர ஏஷ பூதாதிபதி: ஏஷ பூதபால: ஏஷ சேது: விதரண ஏஷாம் லோகாநாம் அம்பேதாய – அனைத்தையும் வசப்படுத்தி வைத்துள்ளவன், அனைத்தையும் நியமிப்பவன் ... இவன் அனைத்தையும் நியமிப்பவன், அனைத்து உயிர்களின் எஜமானனும் அவற்றைக் காப்பவனும் ஆவான், உலகங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து போகாமல், அவற்றைத் தாங்கும் அணை போன்று நிற்பவன்.

இது போன்று ஸத்யகாமத்வம் முதலான குணங்கள் ப்ரஹ்மத்திற்கு இல்லை என்றும், அதற்கான ஆதாரங்கள் இல்லை என்றும் கூறினால், மேலே உள்ள வரிகள் போன்ற பல வரிகளில் இந்தக் குணங்கள் ஏன் படிக்கப்பட்டன என்று கூறப்பட வேண்டும் அல்லவா? ஸத்யகாமத்வம் போன்ற குணங்களுடன் கூடிய ப்ரஹ்மத்தின் உபாஸனம் பற்றி சாந்தோக்ய உபநிஷத் (8-1-6) – தத்ய இஹாத் மாநமநுவித்ய விரஜந்தி ஏதாம்ச்ச ஸத்யகாமாந் தேஷாம் ஸர்வேஷு லோகேஷு காமசாரோபவதி - யார் ப்ரஹ்மத்தையும் அவனது திருக்கல்யாண குணங்களையும் உபாஸனை செய்தபடி பரமபதம் செல்கின்றனரோ, யார் அவர்கள் விருப்பப்படி அனைத்து லோகங்களிலும் உலவுகின்றனரோ - என்று கூறியது. மேலும் அதே உபநிஷத்தில் ப்ரஹ்மத்தை உபாஸிக்காதவர்கள் நிந்திக்கப்படுவதன் மூலம், ப்ரஹ்ம உபாஸனை அதன் குணங்களுடன் கூறப்படுதல் என்பது மேலும் ஆதாரத்துடன் உரைக்கப்படுகிறது. இந்த வரியானது சாந்தோக்ய உபநிஷத் (8-1-6) – அத ய இஹாத் மாநமநநுவித்ய வ்ரஜந்தி ஏதாம்ச்ச ஸத்யாந் காமாந் தேஷாம் ஸர்வேஷு லோகேஷு அகாமசரோ பவதி – யார் ஒருவர் ப்ரஹ்மத்தையும் அவனது திருக்கல்யாண குணங்களையும் உபாஸிக்காமல் பரமபதம் செல்கின்றனரோ, அவர்களுக்கு விருப்பப்படி அனைத்து இடங்களிலும் ஸஞ்சாரம் செய்யும் வழி இல்லை – என்பதாகும். இது போன்றே வாஜஸநேயகத்திலும் இவனது எஜமானத்தன்மை (4-4-22) - ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந: ... ஏஷ ஸர்வேச்வர ஏஷ பூதாதிபதிரேஷ பூதபால: - இவனை அனைத்தையும் வசப்படுத்தி நியமிப்பவன் ... அனைத்திற்கும் எஜமானன், அனைத்திற்கும் ஸ்வாமி, அனைத்தையும் காப்பவன் – என்று கூறப்பட்டது. இது போன்று வேறு பல இடங்களிலும் காணலாம்.

வேதங்கள் ஆயிரம் தாய் தந்தையர்களைக் காட்டிலும் நம் மீது வாத்ஸல்யம் கொண்டவை ஆகும். இப்படிப்பட்ட அவை, தீயவற்றை உரைப்பவர்கள் போன்று பொய்யானவையும், தள்ளப்பட்ட வேண்டியவையும், ப்ரமாணங்களே இல்லாத கருத்துக்களையும் கூறுமோ?

அறிந்து கொள்ள இயலாத குணங்கள் பற்றித் தானே முதலில் ஆதாரத்துடன் கூறிவிட்டு, பின்னர் முரணாகப் பேசுமா? முன்பே ஸம்ஸாரச் சக்ரத்தில் உழன்றபடி உள்ள ஸம்ஸாரிகளை மேலும் மயக்கத்தில் ஆழ்த்துமோ?

மேலும் கீழே உள்ள வரிகள் காண்க:

- ப்ருஹத் உபநிஷத் (4-4-19) – நேஹ நாநாஸ்தி கிஞ்சந - பலவாக உள்ள ஏதும் இங்கு இல்லை.

- ப்ருஹத் உபநிஷத் (4-4-20) – ஏகத் ஏவ அநிநுரஷ்டவ்யம் – ஒன்றாகவே காணவேண்டும்.

இந்த வரிகள் மூலம் ப்ரபஞ்சத்தில் உள்ளவை அனைத்தும் ப்ரஹ்மத்தால் உண்டு பண்ணப்பட்டவைகள், ஆகவே அவை அனைத்தும் ப்ரஹ்மத்தையே தங்கள் ஆத்மாவாகக் கொண்டதால், அனைத்தையும் ஒன்றாகவே நாம் காணவேண்டும் என்று விதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பலவாகப் பார்ர்க்கப்பட்ட வஸ்துக்களை, பலவிதமாகப் பார்த்தல் என்பது தள்ளப்படுகிறது, இதனை நாம் முன்பே பார்த்தோம். மேலும் ப்ருஹத் உபநிஷத் (6-4-22) – ஸ ஏஷ நேதி நேத்யாத்மா - இதில் உள்ள 'இதி' என்ற பதம் மூலம் ப்ரமாணங்களால் அறியப்படும் உலகத்தை எடுத்து, "ப்ரஹ்மம் அத்தகையது அல்ல", என்று ப்ரஹ்மம் அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ள சிறப்பு கூறப்படுகிறது. இதனை ப்ருஹத் உபநிஷத் (6-4-22) – அக்ராஹ்யோ ந ஹி க்ருஹ்யதே அசீர்யோ ந ஹி சீர்யதே அஸங்கோ ந ஹி ஸஜ்யதே அவ்யதிதோ ந வ்யததே நரிஷ்யதி – மற்ற ப்ரமாணங்கள் மூலம் அறியப்படும் அனைத்தையும் விட ப்ரஹ்மம் வேறுபட்டதால், இது மற்ற ப்ரமாணங்கள் மூலமாக அறியப்படுவதில்லை; சிதறக்கூடிய பொருளைக் காட்டிலும் மாறுபட்டதால் இது சிதறுவதில்லை; துன்பம் அடையும் பொருள்களைக் காட்டிலும் மாறுபடுவதால், இது துன்பம் அடைவதில்லை - என்று கூறியது. மற்ற பொருள்கள் பலவும், வேறு ப்ரமாணங்களால் அறியப்படவல்லவையாகும், ப்ரஹ்மம் அவற்றைக் காட்டிலும் வேறுபடுவதால், அந்த ப்ரமாணங்களால் அறியப்பட இயலாதது ஆகும். சிதறக்கூடிய பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டதாக உள்ளதால், ப்ரஹ்மத்தை சிதறடிக்க இயலாது. இது போன்றே மற்ற தன்மைகளுக்கும் பொருள் கொள்ளவேண்டும். சாந்தோக்ய உபநிஷத் (8-1-5) – நாஸ்ய ஜரயைத்த் ஜீர்யதி ந வதேந அஸ்ய ஹந்யதே ஏதத் ஸத்யம் ப்ரஹ்மபுரம் அஸ்மிந் காமாஸ்ஸமாஹிதா: - தஹரா ஆகாஸம் என்னும் ப்ரஹ்மம் ஜீவனின் கிழத்தனத்தால் கிழத்தன்மை அடைவதில்லை; மரணம் அடைவிப்பதால் அது மரணம் அடைவதில்லை; இது ஸத்யமானது; அனைத்துக் கல்யாண குணங்களும் இங்கு பொருந்தி உள்ளது – என்றது. இப்படியாக ப்ரஹ்மம் அனைத்தைக் காட்டிலும் சிறந்தது என்று உணர்த்தப்பட்டு, அதனிடம் ஸத்யகாமத்வம் போன்ற தன்மைகள் உள்ளதாகக் கூறப்பட்டது.

பூர்வபக்ஷம் – நீங்கள் கூறுகின்ற சாந்தோக்ய உபநிஷத் வரிகள் (8-1-6) – தத்ய இஹாத் மாநமநுவித்ய விரஜந்தி ஏதாம்ச்ச ஸத்யகாமாந் தேஷாம் ஸர்வேஷு லோகேஷு காமசாரோபவதி - யார் ப்ரஹ்மத்தையும் அவனது திருக்கல்யாண குணங்களையும் உபாஸனை செய்தபடி பரமபதம் செல்கின்றனரோ, யார் அவர்கள் விருப்பப்படி அனைத்து லோகங்களிலும் உலவுகின்றனரோ – என்றது. இதன்படி அனைத்து உலகங்களிலும் ஸஞ்சாரம் செய்யவல்ல ஸம்ஸாரிகளின் பலம் என்பதே குணங்களுடன் கூடிய ப்ரஹ்மத்தை உபாஸிப்பதன் பலன் என்று கூறப்பட்டது. ஆகவே மோக்ஷம் பெற விரும்புவன் இத்தகைய குணத்துடன் கூடிய ப்ரஹ்ம உபாஸனையை இயற்றக்கூடாது என்றாகிறது (காரணம், ஸஞ்சரித்தபடி இருந்தால் மோக்ஷம் பெற இயலாது அல்லவா). மேலும் சாந்தோக்ய உபநிஷத் (8-3-4) – பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே – பரமாத்மாவை அடைந்த பின்னர் தனது ஸ்வரூபம் அடைகிறான் - என்கிறது. இதன் மூலம் மோஷம் என்பதே பலனாகக் கூறப்பட்டது. ஆகவே ப்ரஹ்மத்தை அடைய விரும்பும் ஒருவன், ஸத்யகாமத்வம் போன்ற குணங்களுடன் கூறப்பட்ட ப்ரஹ்மத்தை உபாஸிக்கக் கூடாது என்றாகிறது (இதற்கான பதில் அடுத்த சூத்திரத்தில் உள்ளது).

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 31)

பரமபக்தி எவ்விதம் மோக்ஷம் கிட்டச் செய்கிறது

மூலம் - இது முனியே நான்முகனிற்படியே ஸங்கோசமற அநுபவித்தல்லது தரிக்கவொண்ணாத அபிநிவேசத்தை உண்டாக்கி மறுக்கவொண்ணாத திருவாணையிட்டு வளைத்துக் கூப்பிடுகையாலே இவனுக்குக் கடுகப் ப்ராப்தியைக் கொடுக்கும்படி ஸர்வேச்வரனுக்குத் த்வராதிசயத்தை உண்டாக்கி இவனை அவாவற்று வீடு பெறப்பண்ணும்.

விளக்கம் – பரமபக்தி என்பது எந்தவிதமான தடைகளும் இல்லாமல் எம்பெருமானை அனுபவிக்கவேண்டும் என்னும் ஆசையையும் உறுதியையும் ஏற்படுத்தும். அதன் பின்னர் பக்தன், எம்பெருமானின் அனுபவம் இல்லாமல் தன்னால் உயிர் வாழ இயலாது என்ற நிலைக்கு வருகிறான். இதனைத் திருவாய்மொழியில் (10-10-1) – முனியே நான்முகனே – என்பதன் மூலம் காணலாம். அவன் எம்பெருமானுடன் கலந்து நிற்கவேண்டும் என்று எண்ணி, தனது எண்ணத்தை எம்பெருமான் முன்னிலையில் ஆணையாகவே இடுகிறான். இதனை எம்பெருமானால் மறுக்க இயலாது.இதன் மூலம் எம்பெருமானுக்கும் அந்த பக்தன் மீது அளவற்ற அன்பு உண்டாகிறது. அதனால் மோக்ஷம் கிட்டும்படிச் செய்து, தன்னுடன் எப்போதும் நிலைக்கும்படிச் செய்கிறான்.

பக்தியோகம் ப்ரபத்தியின் பலனை அளித்தல்

மூலம் – இப்பக்தியோகம் த்ரைவர்ணிகரையொழிந்தார்க்கும் த்ரைவர்ணிகர் தங்களில் ஞானத்திலேயாதல் சக்தியிலேயாதல் இரண்டிலுமாதல்

குறையுடையார்க்கும் பலவிளம்பம் பொறுக்க இசையாத தீவ்ர ஸம்வேகமுடையார்க்கும் யோக்யமல்லாமையாலே தங்கள் அளவுகளைத் தெளிந்து அத்வாரகமாக ப்ரபத்தியை மோக்ஷோபாயமாகப் பற்றுமவர்களுக்கு ஸர்வபலஸாதநமான ப்ரபத்திதானே பரபக்தி ஸ்தாநத்திலே சோதிதையாகையாலே உபாஸகனுக்குப் பரபக்திக்கு மேல் வரும் அவஸ்தைகள் போலே இஸ்ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுடைய கோலுதலுக்கு ஈடாக இப்ப்ரபத்திக்கு மேல் வரும் அநுகூலாவஸ்தைகள் இதின் பலமாயிருக்கும்.

விளக்கம் – இந்தப் பக்தியோகம் என்பது மூன்று வர்ணத்தைச் (அந்தணன், க்ஷத்ரியன், வைசியன்) சேராதவர்களால் கடைபிடிக்க இயலாது. இது போன்று மூன்று வர்ணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஞானம் மற்றும் சக்தி ஆகிய இரண்டிலும் குறையுடன் கூடியவர்களால் கடைபிடிக்க இயலாது. இது போன்று, இதன் பலனாகிய மோக்ஷம் என்பதைப் பெறுவதில் உண்டாகும் தாமதத்தைப் பொறுக்க இயலாதவர்களாலும் கடைபிடிக்க இயலாது. ஆக இப்படிப்பட்டவர்களுக்கு ப்ரபத்தியே ஏற்புடையது. ஆக மேலே உள்ளது போன்ற குறைகள் உள்ளவர்களுக்கு அவர்கள் விரும்புகின்ற பலனை அளிக்கவல்லதாக ப்ரபத்தியே பரபக்திக்குப் பதிலாக ஏற்கப்படுகிறது. பரபக்தியை மோக்ஷ சாதனமாகக் கொண்டவனுக்கு, அத்தகைய பரபக்திக்குப் பின்னர் பரஜ்ஞானம் முதலானவை உண்டாகிறது. அது போன்று, ப்ரபத்தியை மட்டுமே மோக்ஷ சாதனமாகக் கொண்டவனுக்கு, அதன் விளைவாக அவன் வேண்டிய பலன்கள் கைகூடுகின்றன.

ப்ரபத்தி ப்ரஹ்மவித்யையில் ஒன்று

மூலம் – இப்படி ப்ரபத்திக்கும் பக்திக்கும் அதிகாரி விசேஷத்தைப் பற்றித் துல்யபலத்வம் உண்டாகையாலே விகல்பமாகக் கடவது. இவற்றுக்கு நாநாசப்தாதி பேதாத் என்கிற அதிகரணத்திலே பேதம் ஸித்தம். விகல்போ அவிசிஷ்டபலத்வாத் என்கிற அதிகரணத்திலே விகல்பமும் ஸித்தம்.

விளக்கம் – ஆக ஒருவரது தகுதியைப் பொறுத்து ப்ரபத்தி மற்றும் பக்தி என்பது அமைகின்றது. இவை இரண்டும் வெவ்வேறு என்பதை ப்ரஹ்மஸூத்ரம் இவற்றை வெவ்வேறு அதிகரணங்களில் கூறியிருப்பதன் மூலம் உணரலாம். இவற்றுக்கு இடையே வேறுபாடு உள்ளது என்பதை ப்ரஹ்மஸூத்ரம் (3-3-56) - நாநாசப்தாதி பேதாத் – பெயர் முதலானவை வேறுபட்டுள்ளதால், வேறுபாடு உண்டு – என்று கூறியது. இவை இரண்டில் எதனை வேண்டுமானாலும் கைக்கொள்ளலாம்

என்பதை ப்ரஹ்மஸூத்ரம் (3-3-57) - விகல்போ அவிசிஷ்டபலத்வாத் – மோக்ஷம் என்னும் ஒரே பலன் உள்ளதால் எதனையும் கைக்கொள்ளலாம் – என்றது.

ப்ரபத்தியும் உட்பிரிவுகள் கொண்டிருத்தல்

மூலம் - உபாஸநத்தில் விசேஷங்கள் போலே சாகாபேதங்களிலும் பகவச்சாஸ்த்ர ஸஹிதா பேதங்களிலும் சொல்லும் ந்யாஸவித்யையில் மந்த்ராதி விசேஷங்களை கண்டு கொள்வது. நமஸ்காரம் வாசிகம் மாநஸம் காயிகமென்று பிரிந்தாற்போலே ப்ரபத்தியிலும் ஓர் ஒன்றை முன்னிட்டு இவ்விபாகங்கள் சொல்லப்பட்டன. இவை மூன்றும் பொருந்தினபோது பூர்ணநமஸ்காரமானாற்போலே பூர்ணப்ரபத்தியாகக் கடவதென்ற வர்கள் பாசுரங்களுக்கும் வாசிக காயிகங்களான வ்யாபாரவிசேஷங்கள் பரீவாஹமாம்படியான மாநஸப்ரபத்தியினுடைய பூர்த்தியிலே தாத்பர்யமாகக் கடவது. யதாதிகாரம் இவையெல்லாம் பலப்ரதங்களென்னுமிடம் முன்பே சொன்னோம்.

விளக்கம் – உபாஸனைகளில் பலவிதமான வேறுபாடுகள் உள்ளது போன்று, ந்யாஸவித்யையிலும் சாஸ்த்ரங்கள் மூலமாகப் பலவிதமான மந்த்ர பேதங்கள் கூறப்பட்டுள்ளன. நமஸ்காரம் செய்வதில் வாக்கு, மனம், உடல் ஆகிய வேறுபாடுகள் உள்ளது போன்று ப்ரபத்தியிலும் வேறுபாடுகள் உள்ளன. ப்ரபத்தியில் உள்ள ஈடுபாட்டைப் பொறுத்து இவை அமைகின்றன. நமஸ்காரம் செய்யும்போது மனம், வாக்கு, உடல் ஆகிய மூன்று பொருந்தும்போதே முழுமையான நமஸ்காரம் என்று கூறுவது போல, இந்த மூன்றும் பொருந்தினாலே முழுமையான ப்ரபத்தி என்றாகிறது. இந்த வரியை எவ்விதம் புரிந்து கொள்ளவேண்டும் என்றால் – மனதளவில் செய்கின்ற ப்ரபத்தி பூர்ணமாக உள்ளது என்றும், இதன் ப்ரதிபலிப்பே உடல் மற்றும் வாக்கு மூலமாக மேலும் வெளிப்படுகிறது என்றும் உணரவேண்டும். இவை அனைத்தும் அவரவர்களின் தகுதியைப் பொறுத்தே அமையும் என்று முன்பே கூறினோம்.

நின்ற நிலைக்கு உறநிற்கும் கருமமும் நேர்மதியால்
நன்று என நாடிய ஞானமும் நல்கும் உள்கண் உடையார்
ஒன்றிய பத்தியும் ஒன்றும் இலா விரைவார்க்கு அருளால்
அன்று பயன் தரும் ஆறும் அறிந்தவர் அந்தணரே

பொருள் – வர்ணாச்ரம தர்மத்திற்கு ஏற்றபடியான கர்மயோகம் இயற்றல்; ஞானயோகத்தை அதன் பலனை முழுவதுமாக அறிந்த ஞானத்துடன் இயற்றல்;

ஆத்மஸாக்ஷாத்காரத்துடன் ஐக்கியமான பக்தியோகம் இயற்றல்; மேலே உள்ள தகுதி அற்றவர்கள், மோக்ஷ காலம் தாமதிப்பதைப் பொறுத்துக் கொள்ளாதவர்கள் ஆகியவர்களுக்கு எம்பெருமானின் கருணை மூலமாக விரைந்து பலன் அளிக்கவல்ல ப்ரபத்தி – இவை நான்கும் அறிந்தவர்கள், வேதம் முழுவதையும் கற்ற அந்தணர்கள் ஆவர்.

கர்ம ஞானம் உபாஸநம் சரணவ்ரஜ்யா இதி ச அவஸ்திதாந்
ஸந்மார்க்காந் அபவர்க்க ஸாதந வித்யௌ ஸத்வாரக அத்வாரகாந்
ஏகத்வி ஆக்ருதி யோக ஸம்ப்ருத ப்ருதக்பாவ அநுபாவாந் இமாந்
ஸம்யக் ப்ரேக்ஷ்ய சரண்ய ஸரதி கிராமந்தி ரமந்தி புதா:

பொருள் – கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் மற்றும் சரணாகதி ஆகிய நான்கும் மோக்ஷ உபாயங்கள் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இவற்றில் சில நேரடியாக மோக்ஷம் அளிக்கவல்லவை, ஒரு சில மறைமுகமாக அளிக்கவல்லவை ஆகும். இவற்றில் கர்மயோகம் மற்றும் ஞானயோகம் ஆகியவை ஒரு வழியில் மட்டுமே மோக்ஷ உபாயமாக உள்ளன. இவை மறைமுகமாக மோக்ஷம் அளிப்பவை ஆகும். பக்தியோகம் நேரடியாகப் பலன் அளிப்பதாகும். ப்ரபத்தி என்பது தானே நேரடியாகவும், பக்தியோகத்தைத் தூண்டி மறைமுகமாகவும் பலன் அளிப்பதாகும். இப்படியாக இரு வழிகளில் மோக்ஷம் அளிக்கவல்ல உபாயமாக இருக்கும் மேன்மை ப்ரபத்திக்கு மட்டுமே உண்டு. இந்த உண்மையை அறிந்தவர்கள் இதனைக் கடைபிடிக்கிறார்கள்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச் செய்த
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில்

உபாயவிபாகாதிகாரம் ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

முமுக்ஷுப்படி

ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 30)

166. அவன் உபாயமாமிடத்தில் தான் புருஷகாரமாயிருக்கும்; அவன் ப்ராப்யனாமிடத்தில் தான் ப்ராப்யையுமாய்க் கைங்கர்ய வர்த்தகையுமாயிருக்கும்.

அவதாரிகை – இரண்டிடத்திலும் நித்யயோகம் ஒத்திருக்கச்செய்தே அவ்வவதசாநுகுணமாக இவளிருக்கும் இருப்பை அருளிச் செய்கிறார் - அவன் உபாயமாமிடத்தில் – என்று தொடங்கி.

விளக்கம் - த்வய மந்திரத்தின் இரண்டு வரிகளிலும் எம்பெருமானுடன் பெரியபிராட்டி எப்போதும் சேர்ந்து உள்ள நித்யயோகம் கூறப்பட்டுள்ளது – என்றாலும், இவள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் எவ்விதம் செயல்படுகிறாள் என்பதை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, அவன் சேதநர்க்கு அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளுக்கு உபாயமாமிடத்தில் ஸஹாயாந்தர ஸம்ஸர்க்கத்தை ஸஹியாமையாலே தான் உபாயபாவத்தில் அந்வயமின்றிக்கே, ஸாபராத சேதநருடைய அபராதங்களைப் பார்த்து அவன் சீறுமளவில், அத்தை ஸஹித்து அங்கீகரிக்கும்படியாகப் பண்ணும் புருஷாகாரமாயிருக்கும்; அவன் சேதநர்க்குக் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி தயா ப்ராப்யனாமிடத்தில், அவனேபாதி கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாய்க்கொண்டு தான் ப்ராப்யையுமாய், இவர்கள் செய்யும் கைங்கர்யத்தை அவன் திருவுள்ளத்திலே ஒன்று பத்தாகப்படுத்தி

உகப்பிக்கையாலே கைங்கர்ய வர்த்தகையுமாயிருக்கும் – என்கை. இது தன்னைப் பரந்தபடியிலே - பூர்வவாக்யத்தில் ஸ்ரீமச்சப்தம் சேதநருடைய அபராதத்தையும் ஈச்வரனுடைய ஸ்வாதந்தர்யத்தையுங்கண்டு, “இவர்கள் அவனுடைய க்ரோதத்துக்கு விஷயபூதராய் நசித்துப்போகாதே, இவனைக் கிட்டி உஜ்ஜீவித்துப் போக வேணும்”, என்று ஸாபராதரான சேதநரை ஈச்வரனோடே சேர்க்கைக்கான என்றுமொக்க விடாதேயிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது; இங்குத்தை ஸ்ரீமச்சப்தம் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தைத்வத்தைப் பற்றவும், இவர்கள் பண்ணுங்கைங்கர்யத்தை ஈச்வரன் திருவுள்ளத்திலே ஒன்று பத்தாகப் படுத்துகைக்காகவும் அநுபவ விச்சேதத்தில் தனக்கு ஸத்தாஹாநி பிறக்கும்படி இருக்கையாலே, நிரந்தர ஸம்ஸ்லேஷத்துக்காகவும், அவனை க்ஷணகாலமும் பிரியாதே ஸர்வகாலமும் ஸம்ச்லிஷ்டையாயிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது - என்று விஸ்தரேண அருளிச்செய்தார்.

விளக்கம் - தன்னை அடைய விரும்பும் சேதனர்களுக்கு ஏற்படும் தடைகளை விலக்கும்போதும், அவர்களுக்கு வேண்டியதை அளிக்கும்போதும் எம்பெருமான் அவர்களின் உபாயமாக உள்ளான். இந்தச் சூழ்நிலையில் அவன் தன்னைத் தவிர சேதனர்கள் வேறு எந்த ஓர் உபாயத்தையும் நாடுவதை விரும்புவதில்லை. இப்படி உள்ளபோது, பெரியபிராட்டியார் தான் ஓர் உபாயமாக மாறாமல், சேதனர்களின் குற்றங்களைக் கண்டு எம்பெருமான் கோபம் கொள்ளும்போது, அந்தக் குற்றங்களை அவன் காணாமல் நம்மை மன்னிக்கும்படியாக, சிபாரிசு செய்பவளாக உள்ளாள். எம்பெருமான் சேதனர்களின் கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்கின்ற ப்ராப்யையாக உள்ளாள். சேதனர்கள் அவனுக்குச் செய்கின்ற ஒரு மடங்கு கைங்கர்யத்தை, எம்பெருமான் பத்து மடங்காகக் காணும்படிச் செய்கிறாள். இப்படியாகக் கைங்கர்யத்தை வளர்க்கிறாள். இதனைப் பரந்தபடியில் மிகவும் விரிவாக அருளிச்செய்கிறார். முதல் வரியில் உள்ள ஸ்ரீமத் என்ற பதத்தின் மூலம் - இவள் சேதனர்களின் குற்றங்களையும் எம்பெருமானின் தண்டிக்கும் சுதந்திரத்தையும் அறிந்து, ”இவர்கள் அவனது கோபத்திற்கு இலக்காக நின்று நாசம் அடையாமல் தடுக்க வேண்டும். நான் அவனிடம் சென்று இவர்கள் பிழைக்கும் வழி செய்யவேண்டும்”, என்று எண்ணுவது உணர்த்தப்பட்டது. ஆக, குற்றங்கள் நிறைந்தவர்களாக உள்ளபோதிலும், சேதனர்கள் எம்பெருமானுடன் சேர்ந்து இருப்பதற்காக, இவள் அவனுடன் எப்போதும் சேர்ந்து இருக்கிறாள் என்று கருத்து. இரண்டாவது வரியில் உள்ள ஸ்ரீமத் என்ற பதம், கைங்கர்யம் ஏற்றுக் கொள்பவளாக இவள் இருக்கின்ற நிலையைக் கூறுகின்றது. இந்த வரி மூலம் இவள் இரண்டு காரணங்களுக்காக எம்பெருமானை விட்டு ஒரு நொடி கூட பிரியாமல் உள்ளாள் என்று உணர்த்தப்படுகிறது. அவையாவன - எம்பெருமான் மனதில் சேதனர்கள் செய்கின்ற கைங்கர்யங்களை பத்து மடங்கு ஆக்குதல்; அவனை விட்டு ஒரு நொடி பிரிந்தாலும் பொறுத்துக் கொள்ளாமல் இருத்தல் – என்பதாகும்.

167. இதிலே திருமந்திரத்தில் சொன்ன ப்ராப்யத்தை விசதமாக அநுஸந்திக்கிறது.

அவதாரிகை – திருமந்திரத்தில் உத்தரபதத்துக்கு இவ்வுத்தரவாக்யம் விவரணமாயிருக்கிற படியை அருளிச்செய்கிறார் – இதிலே - என்று தொடங்கி.

விளக்கம் - த்வய மந்திரத்தின் இரண்டாவது வரியானது திருமந்திரத்தின் இறுதி பதமான நாராயணாய என்பதன் விளக்கமாக உள்ளது என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி ஒரு மிதுநமென்னுமிடத்தை சாப்தமாக ப்ரதிபாதிக்கிற இந்த வாக்யத்திலே, திருமந்த்ரத்தில் "நாராயணாய" என்று கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி ஒரு மிதுநமென்னுமிடம் ஆர்த்தமாகையாலே அவிசதமாகச் சொன்ன ப்ராப்யத்தை விசதமாக அநுஸந்திக்கிறது - என்கை. அங்கு "நாராயணனுக்கே அடிமை செய்யப் பெறுவேனாக வேணும்" என்கிற இவ்வளவொழிய, "அடிமை கொள்ளுமவன் ஸ்ரீமானாகவேணும்" என்றும், "அடிமை செய்யுமவன் நிர்மமனாக வேணும்" என்றும் சொல்லாமையாலும், அவை இரண்டும் இங்குச்சொல்லுகையாலுமிறே, அந்தப் பதத்துக்கு இவ்வாக்யம் விவரணமாயிற்று.

விளக்கம் – த்வய மந்திரத்தின் இரண்டாவது வரியானது சேதனர்களின் கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்வது திவ்யதம்பதிகள் என்று காண்பிக்கிறது. இதன் மூலம் திருமந்திரத்தில் கூறப்பட்ட நாராயணாய என்ற பதத்தின் பொருள் தெளிவாகக் கூறப்பட்டது. திருமந்திரத்தில் கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்பவன் மஹாலக்ஷ்மியுடன் கூடியவனாக இருக்கவேண்டும் என்றோ, கைங்கர்யம் செய்பவன் சுயநலம் இல்லாமல் இருக்கவேண்டும் என்றோ நேரடியாகக் கூறப்படவில்லை. அங்கு, "நாராயணனுக்கே நான் அடிமை செய்ய வேண்டும்", என்பதே கூறப்பட்டது. ஆனால் இங்கு மேலே உள்ள இரண்டு கருத்துக்களும் தெளிவாகக் கூறப்பட்டதால், இது "நாராயணாய" என்று பதத்தின் விளக்கமாக உள்ளது.

168. இளையபெருமாளைப்போலே இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை.

அவதாரிகை - இம்மிதுநத்துக்கே அடிமை செய்யவேணும் என்கிற நிர்ப்பந்தந்தானென்? என்ன, அருளிச்செய்கிறார் – இளையபெருமாளைப்போலே - என்று தொடங்கி.

விளக்கம் - கைங்கர்யத்தை எம்பெருமான் – பெரியபிராட்டியார் என்ற தம்பதிக்கு மட்டுமே செய்யவேண்டும் என்று ஏன் கூறவேண்டும்? இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநிஷு ரம்ஸ்யதே அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே என்று பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியிலே அடிமை செய்த இளையபெருமாளைப்போலே, இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை இவ்வாத்மாவுக்கு ஸ்வரூப ப்ராப்தம் – என்கை. மிதுந சேஷத்வம் ஸ்வரூபமானால் மிதுந கைங்கர்யமிறே ஸ்வரூப் ப்ராப்தம்.

விளக்கம் - இராமாயணம் – பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநிஷு ரம்ஸ்யதே அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே – லக்ஷ்மணன் இராமனிடம், "பெருமானே! நீ வைதேகியுடன் மலையின் அடிவாரங்களில் விளையாடும்போதும், கண் விழித்துள்ள போதும், உறங்கும்போதும் உனக்கு அனைத்துக் கைங்கர்யங்களும் செய்தபடியே இருப்பேன்", என்று கூறினான். இது போன்றே அவர்கள் இருவரும் சேர்ந்து இருக்கும் நேரத்தில் கைங்கர்யம் செய்தலே நமது ஆத்மாவின் ஸ்வரூபமாக உள்ளது. இந்த இருவருக்கும் அடிமையாக உள்ளதே ஆத்மாவின் ஸ்வரூபம் என்பதால், இந்தத் தம்பதிக்குக் கைங்கர்யம் செய்தல் பொருத்தமே ஆகும்.

169. அடிமைதான் ஸித்திப்பதும் ரஸிப்பதும் அச்சேர்த்தியிலே.

அவதாரிகை - இன்னும் அச்சேர்த்தியிலே அடிமை செய்யுமளவிலுள்ள வாசியை அருளிச் செய்கிறார் - அடிமை - என்று தொடங்கி.

விளக்கம் - எம்பெருமானும் பிராட்டியும் சேர்ந்துள்ளபோது கைங்கர்யம் செய்கின்ற நிலையின் மேன்மையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது ஸ்வதந்த்ரனான ஈச்வரன் உபேக்ஷியாமல் கைங்கர்யங் கொண்டருளும்படி பண்ணுமவள் இவளாகையாலே ஸீதாமுவாச, ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசநம் அப்ரவீத் என்று இவள் முன்னிலையாகத் தம்முடைய ஸ்வரூபாநுரூபமான அடிமையை அபேக்ஷித்துப் பெற்ற இளையபெருமாளைப்போலே இவன் ப்ரார்த்திக்கிற அடிமைதான் ஸித்திப்பதும் மாதாபிதாக்கள் இருவருமான சேர்த்தியிலே சுச்ரூஷை பண்ணும்

புத்ரனுக்குப்போலே, செய்கிற அடிமைதான் ரஸிப்பதும் பிராட்டியும் அவனுமான சேர்த்தியிலே – என்கை.

விளக்கம் – தனது விருப்பப்படி செயல்கள் புரிபவனான எம்பெருமான், சேதனர்களின் கைங்கர்யத்தை ஒதுக்கிவிடாமல் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்பவள், பெரியபிராட்டியே ஆவாள். ஆகையால் இவள் இருக்கும்போது இலக்ஷ்மணன் இராமனிடம் பின் வரும் வரிகளைக் கூறினான் என்பதை இராமாயணத்தில் காணலாம்:

- ஸீதாம் உவாச – சீதையிடம் கூறினான்
- ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசநம் அப்ரவீத் – சீதையைப் பார்த்தபடி இராமனிடம் கூறினான்

இப்படிச் சேதனனின் கைங்கர்யம் என்பது இந்த இருவரும் சேர்ந்து இருக்கின்ற நிலையிலேயே பலிக்கும். தாய் தந்தையர் சேர்ந்து உள்ளபோது தொண்டு செய்யும் புத்திரன் போன்று, எம்பெருமானும் பிராட்டியும் சேர்ந்துள்ளபோது கைங்கர்யம் செய்வதே இன்பத்தை உண்டாக்கும்.

170. நாராயணாய – ஸர்வசேஷியாயுள்ளவனுக்கு.

அவதாரிகை - இனி இரண்டாம் பதத்தை உபாதாநம் பண்ணுகிறார் – நாராயணாய - என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் – ஸர்வசேஷியாயுள்ளவனுக்கு – என்று.

விளக்கம் - அடுத்து இரண்டாவது பதமான நாராயண என்பதை விளக்குகிறார்.

வ்யாக்யானம் – நாராயாணத்வம், உபயவிபூதி நாதத்வமாகையாலே “ஸர்வ சேஷியாயுள்ளவனுக்கு” என்கிறார். கைங்கர்ய ப்ராப்திஸம்பந்தியவான் சேஷியிறே.

விளக்கம் - நாராயண என்ற பதம் நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டிற்கும் தலைவன் என்பதை குறிக்கிறது. ஆகவே ஸர்வசேஷியாக உள்ளவனுக்கு, அனைத்திற்கும் எஜமானனாக உள்ளவனுக்கு என்று கூறுகிறார். கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்பவன் சேஷி எனப்படுவான்.

171. இதிலே திருமேனியையும் குணங்களையும் சொல்லும்.

அவதாரிகை - கைங்கர்யந்தான் அநுபவஜிநித ப்ரீதிகாரிதமாகையாலும், அந்த ப்ரீதிதான் அநுபாவ்ய விஷயாதீநையாகையாலும், அநுபாவ்ய விஷயம் சொல்ல வேண்டுகையாலே அருளிச் செய்கிறார் - இதிலே திருமேனியையும் குணங்களையும் சொல்லும் – என்று.

விளக்கம் - கைங்கர்யம் என்பது எம்பெருமான் அதனை ஏற்றுக்கொள்வதால் பிறக்கின்ற மகிழ்ச்சி காரணமாகப் பெருகுவதாகும். அந்த மகிழ்ச்சி என்பது கைங்கர்யம் மூலமாக அனுபவிக்கப்படும் விஷயத்தை பொருத்தே ஆகும். ஆகவே அந்த விஷயத்தை இங்கு அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிற இப்பதத்தில் கைங்கர்யத்துக்குப் பூர்வபாவியாயிருக்கும் அநுபவத்துக்கு விஷயமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், கல்யாண குணங்களையும் சொல்லும் – என்கை. ஸதா பச்யந்தி என்றும், ஸோஸ்நுதே ஸர்வாந் காமாந் என்றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே திவ்யமங்கள விக்ரஹமும் கல்யாண குணங்களும், ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி என்கிற ஸ்வரூபத்தோபாதி கைங்கர்ய வர்த்தகங்களுமாய் போக்யங்களுமாயிறே இருப்பது; குணங்கள் என்று சாமாந்யேந சொல்லுகையாலே ஜ்ஞாநசக்த்யாதி குணங்களோடு வாத்ஸல்யாதி குணங்களோடு ஸௌர்யாதி குணங்களோடு வாசியற எல்லா குணங்களும் அநுபாவ்யங்களாயிருக்கையாலே பூர்வவாக்யத்தில் நாராயண பதத்தில் உபாயவரணத்துக்கு உபயுக்ததயா அநுஸந்தேயங்களான குணவிசேஷங்களும் இப்பதத்தில் ப்ராப்யதயா அநுஸந்தேயங்கள்; ஆச்ரயமான ஸ்வரூபத்துக்கு ஆகார த்வயமுண்டாயிருக்கிறாப்போலே ஆச்ரயிகளான குணவிசேஷங்களுக்கும் ஆகாரத்வயமும் உண்டாயிறேயிருப்பது. இவையெல்லாம் பரந்தபடியிலே அருளிச்செய்தார்.

விளக்கம் - கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்கின்ற எம்பெருமானைக் குறிக்கின்ற நாராயணாய என்ற பதம் மூலம் கைங்கர்யம் செய்வதற்கு முன்னே தூண்டுகோலாக உள்ள அவனுடைய திருமேனி பற்றியும், திருக்கல்யாண குணங்கள் பற்றியும் அருளிச் செய்கிறார். யஜுர்வேதம் – ஸதா பச்யந்தி – நித்யஸூரிகள் எப்போதும் காண்கின்றனர் – என்றும், தைத்திரீய ஆனந்தவல்லி – ஸ: அஸ்நுதே ஸர்வான் காமான் – ப்ரஹ்மத்துடன் சேர்ந்து இன்பமாக உள்ளான் – என்றும் உள்ள வரிகள் மூலமாக, அவனுடைய திருமேனியும் திருக்கல்யாண குணங்களும் அனுபவிக்கத் தக்கவையாக உள்ளன என்று அறியலாம். இவை இரண்டும் (திருமேனியும், திருக்கல்யாண குணங்களும்), தைத்திரீய ஆனந்தவல்லி

– ரஸம் ஹி ஏவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி - ஜீவன் அவனை அடைந்து ஆனந்தம் அடைகிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப, அவனுடைய ஸ்வரூபத்தைப் போன்றே கைங்கர்யத்தை வளரச் செய்பவையாக உள்ளன. குணங்கள் என்று பொதுவாகக் கூறியதால் - ஞானம், சக்தி ஆகிய குணங்களோடு வாத்ஸல்யம் முதலான குணங்களும், ஸௌர்யம் முதலான குணங்களும் வேறுபாடு இல்லாமல் அனுபவிக்கப்பட வேண்டும் என்று கருத்து. த்வயமந்திரத்தின் முதல் வரியில் உள்ள நாராயண என்ற பதம் மூலம், உபாயமாகிய அவனைப் பற்றுவதற்கு உபாயங்கள் எவ்விதம் கூறப்பட்டதோ, அந்தக் குணங்கள் அனைத்தும் இந்த வரியில் அவனே இலக்காகவும் உள்ளான் என்பதைக் கூறப்பட்டது. எம்பெருமானின் குணங்களுக்கு இருப்பிடமாக விளங்குகின்ற அவனுடைய ஸ்வரூபத்திற்கு உபாயம் மற்றும் உபேயம் ஆகிய இரண்டு தன்மைகள் உண்டு; இது போன்று அவனது ஸ்வரூபத்தில் உள்ள குணங்களுக்கும் இந்த இரு தன்மைகள் இருப்பது முறையே ஆகும். இவை அனைத்தையும் பரந்தபடியில் விரிவாக அருளிச் செய்கிறார்.

172. சேஷித்வத்திலே நோக்கு.

அவதாரிகை – இனி இப்பதத்துக்குத் தாத்பர்யம் இன்னதிலே என்கிறார் - சேஷித்வத்திலே நோக்கு – என்று.

விளக்கம் - நாராயண என்ற பதத்தின் முதன்மையான தன்மையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, அநுபாவ்யத்வம் அவிசிஷ்டமாகையாலே ஸகலகுணங்களும் ப்ரதிபாதிதமாயிருந்த்தேயாகிலும், சதுர்த்யம்சத்தில் சொல்லுகிற வ்ருத்தி விசேஷத்துக்கு மிகவும் அந்தரங்கமாயிருப்பது சேஷித்வமாகையாலே, அதிலே இப்பதத்துக்கு நோக்கு – என்கை.

விளக்கம் - இந்தப் பதத்தால் அனுபவிக்கப்படும் வஸ்துவானது நேரடியாகக் கூறப்படாமல், இந்தப் பதம் எம்பெருமானின் அனைத்துக் குணங்களையும் குறிக்கும் என்று கூறுவதைக் காண்க. ஆனால், நான்காம் வேற்றுமை மூலம் கூறப்படும் கைங்கர்யத்திற்கு, அவன் அனைத்திற்கும் எஜமானனாக இருத்தல் என்பதே முக்கியமாக உள்ளதால், அவனுடைய சேஷித்வம் (எஜமானத்தன்மை) என்பதே "நாராயண" என்னும் இந்தப் பதத்தின் முக்கியமான பொருளாகக் கூறப்பட்டது.

ஸ்ரீபிள்ளை லோகாசார்யார் திருவடிகளே சரணம்
ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீ ரங்கநாயகி ஸமேத ஶ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

திருக்குறுந்தாண்டகம்

(பாகம் - 4)

6. மூவரில் முதல்வன் ஆய ஒருவனை உலகங் கொண்ட
கோவினைக் குடந்தை மேய குருமணித் திரளை இன்பப்
பாவினைப் பச்சைத் தேனைப் பைம்பொன்னை அமரர் சென்னிப்
பூவினைப் புகழுந் தொண்டர் என்சொல்லிப் புகழ்வர் தாமே.

பொருள் - ப்ரம்மன், ருத்திரன், இந்திரன் ஆகிய மூவருக்கும் காரணமான ஒப்பற்றவன்; இந்த உலகத்தைத் தானமாக பெற்றதால் உலகின் நாயகன்; திருக்குடந்தை நகரத்தில் பொருந்தியுள்ள நீல இரத்தின கற்களின் குவியல் போன்றவன்; இன்பமான பாடல் போன்று காதுகளுக்கு இனியவன்; சிறந்த பொன் போன்று ஆசைப்படத்தக்கவன்; நித்யஸூரிகள் தங்கள் தலைகளில் சூடிக் கொள்கின்ற மலர் போன்றவன் - இப்படிப்பட்ட அவனை அவனது அடியார்கள் என்ன கூறிப் புகழ்வார்கள்?

வ்யாக்யானம் - (மூவரிலித்யாதி) இந்த்ரனைக் கூட்டுதல், தன்னைக் கூட்டுதல்; ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந: என்னும்படியே மூவருக்கும் காரணமாகையாலே (முதல்வன்) என்கிறார். (முதல்வனாயவொருவனை) – மூவுருவுங்கண்ட போதென்றாஞ்சோதி என்கிறபடியே மூவரையும் தனித்தனியே கண்டால் இவனே காரணபூதன். இவனே காரணபூதனென்னலாய், மூவரையுஞ் சேரக்கண்டால் இருவர் கார்யகோடி நிவிஷ்டராய், இவனே இருவருக்கும்

காரணமென்னும்படி பரஞ்ஜோதிச் சப்தவாச்யன் இவனேயாயிருக்கையாலே "அஞ்சோதி ஒன்று" என்கிறார். (உலகங்கொண்ட கோவினை) - மூவருக்கும் ப்ரதாநனானால் அவர்கள் கார்யம் செய்து கொடுக்கவேணுமே; அவர்களிலே ஒருவனுக்கும் கார்யம் செய்தபடி. (உலகங்கொண்ட) - இந்த்ரனுடைய ராஜ்யத்தை மஹாபலி பறித்துக் கொள்ள, அவன் பக்கலிலே தானே சென்று அபேக்ஷித்து, "மூவடி" என்று இந்திரன் கார்யம் செய்ய முதலடியிட்டபடி. முன்பே ஒருவனுக்குக் கையோட்டைத் தீர்த்து விட்டான். முடையடர்த்த சிரமேந்தி மூவுலகும் பலிதிரிவோன் இடர்கெடுத்த திருவாளனிறே. அவன் தமப்பனுக்குத்தானே வேதப்ரதாநம் பண்ணினான். இப்படி செய்கைக்கு ஹேதுவென்? என்னில்; (கோவினை) – நிர்வாஹகனாகையாலே. (குடந்தைமேய) - இன்னும் ஸம்ஸாரிகள் இடர்பட்டாருண்டாகிலும் கைகழியப் போகவொண்ணாதென்று திருக் குடந்தையிலே படுக்கை பொருந்திப் பள்ளி கொண்டவனை. (குருமணித்திரளை) - ச்ரேஷ்ட்டமான நீலரத்ந ஸமூஹம் போலே புகர்த்துக் குளிர்ந்த வடிவழகையுடையவனை.

விளக்கம் – (மூவரில்) – ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந: – நாராயணனாகிய ஜனார்த்தனன் ஒருவனே – என்று கூறும்படி ப்ரம்மன், ருத்திரன் இந்திரன் ஆகிய மூவருக்கும் காரணமாக எம்பெருமான் உள்ளதால் முதல்வன் என்கிறார். (முதல்வனாய) - திருநெடுந்தாண்டகம் (2) - மூவுருவுங்கண்ட போதென்றாஞ்சோதி - மூன்று பேரையும் தனித்தனியாகக் காணும்போது, "இவன் உலகின் காரணமோ, அவன் உலகின் காரணமோ", என்ற ஐயம் தோன்றலாம். ஆனால் மூவரையும் ஒன்றாகக் கண்டால், மற்ற இருவருக்கும் இவனே கரணமாகவும், அவர்கள் இருவரும் இவனது காரியமாகவும் உள்ளது விளங்கும். தைத்திரீயம் – பரம்ஜோதி – என்று இவனையே கூறியது. இதை ஒட்டி இவரும் திருநெடுந்தாண்டகத்தில் - ஆம் சோதி ஒன்று – என்றார். (உலகம் கொண்ட கோவினை) - மூவரிலும் இவனே முதன்மையானவன் என்றால் அவர்களுக்காக, அவர்களது செயலை இவன் செய்ய வேண்டும் அல்லவா? அவர்களில் ஒருவனாக இருக்கின்ற இந்திரனுக்காக இவன் செய்த செயலை அருளிச்செய்கிறார். (உலகம் கொண்ட) - இந்திரனின் பதவியை மஹாபலி பறித்துக் கொண்டான். இந்த மஹாபலியிடம் தானாகவே சென்று யாசித்து நின்றான். "மூவடி" என்று இந்திரனின் செயலை இவன் செய்ததைக் கூறியது போன்று, மற்ற இருவருக்கும் ஏதேனும் செய்தானா? இந்திரனுக்கு உதவி செய்வதற்கு முன்பாகவே ருத்திரனின் கையில் ஓடு ஒட்டிய சாபத்தை அழித்தான். பெரியதிருமொழி (6-9-1) - முடை அடர்ந்த – என்று இவரே அருளிச்செய்தார் அல்லவா? அடுத்து, ருத்திரனின்

தந்தையான நான்முகனுக்கு இழந்த வேதத்தை மீட்டுக் கொடுத்தான். இவ்விதமாக இவர்களுக்காக இவன் பல உதவிகள் செய்ததன் காரணம் என்ன? (கோவினை) – இதன் காரணம், அனைத்தையும் நிர்வாகம் செய்பவனாக உள்ளதால் ஆகும். (குடந்தை மேய) - எந்தக் காலத்திலும் ஸம்ஸாரிகள் துன்பத்தில் சிக்க நேர்ந்தால், அந்தத் துன்பத்தை நீக்குவதற்கு ஏற்ற ஆள் இல்லாமல் அவர்கள் தவித்து நிற்கக்கூடாது என்று எண்ணி, திருக்குடந்தையில் ஆதிசேஷன் என்னும் படுக்கையில் சயனித்துள்ளவன். (குருமணித்திரளை) – மிகவும் உயர்ந்த நீல நிற இரத்தினக் கற்களின் குவியல் போன்று ஒளி வீசும் குளிர்ச்சியான வடிவழகு உடையவன்.

வ்யாக்யானம் – (இன்பப்பாவினை) - செவிக்குத் தம்முடைய கவி போலே தித்தித்திருக்கிறபடி. பாவென்பவது – இயல், பாட்டு. இன்கவிபாடும் பரமகவிகளான முதலாழ்வார்கள் கவிபோலே இனியனாயுள்ளவனை என்னவுமாம். (பச்சைத்தேனை) - செவிக்கேயன்றிக்கே நாக்குக்குமிருக்கிறபடி. (பைம்பொன்னை) - உடம்புக்கு அணையலாம்படி ஸ்ப்ருஹணீயமாயிருக்கை. (அமரர்சென்னிப்பூவினை) – அயர்வறும் அமரர்களுக்கு சிரோபூஷணமானவனை. "அரும்பினையலரை", "பாதபற்புத்தலை சேர்த்து" என்ன வேண்டாவே அவர்களுக்கு. (புகழுந்தொண்டர்) - இவ்விஷயத்தைப் புகழ்ந்தார்களாகக் கொண்டோம்; இதுக்குப் பாசுரம் எங்கே தேடிச் சொன்னார்கள், கிண்ணகத்திலே புக்கு முழுகுவாரைப்போலே குமிழிநீருண்டு போமித்தனைபோக்கி? (என்சொல்லிப் புகழ்வர்தாமே) - "அரும்பொருளாதல் அறிந்தனர்" என்று அறியவெண்ணாதென்று புகழுமதொழியப் பாசுரமிட்டுப் புகழப்போகாது.

விளக்கம் – (இன்பப்பாவினை) – இவருடைய பாசுரங்கள் காதுகளுக்கு இன்பமாக இருப்பது போன்று, இனிமையாக உள்ளவனை. பா என்றால் பாட்டு என்பதாகும். திருவாய்மொழி (7-9-6) – இன்கவி பாடும் – என்று கூறுவது போன்று, முதலாழ்வார்களின் பாசுரங்கள் போன்று இனிமையாக உள்ளவன் என்றும் கூறலாம். (பச்சைத் தேனை) – காதுகளுக்கு மட்டும் அல்லாமல், நாவிற்கும் இனிமையாக உள்ளவன். (பைம்பொன்னை) – உடலில் ஆபரணமாக அணிந்து கொள்ளப்படும் தூய தங்கத்தைப் போன்று அனைவராலும் விரும்பப்படுபவனாக இருத்தல். (அமரர் சென்னிப்பூவினை) – திருவாய்மொழி (1-1-1) - அயர்வறும் அமரர்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப நித்யஸூரிகளின் தலைகளுக்கு ஆபரணமாக உள்ளவன். பெரியதிருமொழி (7-10-1) - அரும்பினையலரை – என்றும்,

திருவாய்மொழி (2-9-1) – பாதபற்புத் தலை சேர்த்து - என்றும் கூறியது காண்க. (புகழும் தொண்டர்) – இப்படிப்பட்ட இவனைப் பற்றிப் பலரும் புகழ்வதாக நாம் பார்க்கிறோம். அவர்கள், வெள்ளத்தில் சிக்குண்டு மூழ்கி, மூச்சுத் திணறி திகைப்பது போன்று, ஒரு சில விஷயங்களைக் கூறினார்கள், இவனைப் பற்றி எங்கே முழுவதுமாகக் கூறினார்கள். (என்சொல்லி) – திருவாய்மொழி (9-3-3) – அரும் பொருளாதல் - என்று கூறுவது போன்று இவனைக் குறித்து “அளவிட இயலாது” என்று மட்டுமே புகழ்வது இயலும், அதற்கு மேல் ஏதேனும் கூறிப் புகழ இயலுமா?

7. இம்மையை மறுமை தன்னை எமக்கு வீடு ஆகி நின்ற
மெய்ம்மையை விரிந்த சோலை வியன் திருவரங்கம் மேய
செம்மையைக் கருமை தன்னைத் திருமலை ஒருமையானைத்
தன்மையை நினைவார் என்றன் தலைமிசை மன்னுவாரே.

பொருள் - இந்த உலகில் வாழும்போது சிறந்த ஞானத்தை அளிப்பவன்; மோக்ஷம் அடைந்த பின்னர் கைங்கர்யத்தை அளிப்பவன்; நாங்கள் மோக்ஷம் பெறுவதற்கு ஏற்ற உபாயமாக உள்ளவன்; எங்கும் நிறைந்த சோலைகளைக் காண்பதில் வியப்பை உண்டாக்கும் திருவரங்கத்தில் சயனித்துள்ளவன்; சிகப்பு மற்றும் கருப்பு நிறம் கொண்டவன்; திருவேங்கடமலையில் அனைவருக்கும் ஒரே போன்று திருமுகம் காட்டி நிற்பவன்; அடியார்களுக்கு என்றும் வசப்பட்டு நிற்பவன் - இப்படிப்பட்ட அவனை எப்போதும் எண்ணுபவர்கள் எனது தலைமீது நிற்கும் தகுதி பெற்றவர்கள் ஆவர்.

அவதாரிகை – ஸர்வேச்வரனுடைய ஆச்ரித பாரதந்த்ர்யத்தை அநுஸந்திக்கவல்லார்க்கு ஸஞ்சார பூமி என் உத்தமாங்கம் என்கிறார்.

விளக்கம் - ஸர்வேச்வரன் தன்னுடைய அடியார்களுக்கு எப்போதும் வசப்பட்டு நிற்கிறான். அவனது இந்தத் தன்மையை எண்ண வல்லவர்கள் உலவுகின்ற இடமானது தனது தலையே என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் - (இம்மையை) - இஹலோகத்தில் ஸ்வவிஷய ஜ்ஞாந ஸுகத்தைத் தருமவனை. (மறுமைதன்னை) - சரீரஸமநந்தரம் ஸ்வரூபானுரூபமான கைங்கர்யத்தைத் தருமவனை. ஸம்ஸாரத்தில் துக்கநிவ்ருத்தியே ஸுகமென்று ப்ரமமேயிறே. (எமக்கு வீடாகி நின்ற மெய்மையை) - நமக்கு மோக்ஷ ஸுகமாயுள்ளவனை. கீழ்ச்சொன்ன ப்ராப்யத்துக்கு அவ்யவஹிதமான உபாயமானவனை. (விரிந்தசோலை இத்யாதி) - அவ்வுபாயம் ஸுலபமான

இடத்தைப் பேசுகிறார். பரந்த சோலையை உடைத்தாய், விஸ்மயநீயமாயிருந்துள்ள கோயிலிலே நித்யவாஸம் பண்ணுமவனை.

விளக்கம் – (இம்மையை) – இந்த உலகில் தன்னைப் பற்றிய விஷயம் எனப்படும் சிறந்த ஞானம் என்னும் சுகத்தை அளிப்பவன். (மறுமை தன்னை) – இந்த உடல் நீங்கிய பின்னர் பரமபதத்தில் நமது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி கைங்கர்யத்தை அளிப்பவன். ஸம்ஸாரத்தில் இருக்கின்ற துன்பங்கள் நீங்குவதே சுகம் என்று ஒரு சிலர் மயங்கக்கூடிய கைவல்யத்தை இங்கு தனித்து விளக்குகிறார். (எமக்கு வீடாகி நின்ற மெய்ம்மையை) – நமக்கு மோக்ஷ சுகமாக உள்ளவன். இத்தகைய மோக்ஷம் அடைவதற்கு உபாயமாக உள்ளவன். (விரிந்த சோலை இத்யாதி) – இந்த உபாயம் எங்கு கிடைக்கும் என்ற இடத்தைக் கூறுகின்றார். பரந்த சோலையைக் கொண்டதால் அனைவரும் வியக்கும் விதமாக உள்ள திருவரங்கத்தின் பெரியகோயிலில் என்றும் வசிப்பவன்.

வ்யாக்யானம் - (செம்மையை கருமை தன்னை) - யுகந்தோறும் அவ்வவ யுகங்களிலுள்ளார்க்குத் தக்க வடிவுகளைக் கொண்டு அவர்களை ரக்ஷிக்குமவனை; "முன்னை வண்ணம்" இத்யாதிப்படியே செம்மையும் கருமையும் மற்ற இரண்டுக்கு உபலக்ஷணம். (திருமலை ஒருமையானை) - "கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு", என்கிறபடியே திருமலையிலே நின்று நித்யஸூரிகளுக்கும் நித்ய ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க முகங்கொடுக்குமவனை. (தன்மையை நினைவார்) - இந்த ஆச்ரித பாரதந்த்ர்யத்தை நினைக்கவல்லார். (என்றன் தலைமிசை மன்னுவாரே) - அவன் திருவடிகளும் இவர்கள் திருவடிகளும் ஒக்கவன்று மன்னுவது; இவர்கள் திருவடிகளே எந்தலையை மன்னுவது. "தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலைமேலார்" என்கிறார்.

விளக்கம் – (செம்மையை கருமை தன்னை) – ஒவ்வொரு யுகங்களிலும் அந்த யுகங்களில் வாழ்பவர்களுக்கு ஏற்றபடி வடிவம் கொண்டு காப்பவன். பெரியதிருமொழி (4-9-8) – முன்னை வண்ணம் - என்று கூறுவதற்கு ஏற்ப, சிகப்பு மற்றும் கருப்பு ஆகிய இரண்டும் இவன் க்ருத, த்ரேதா, த்வாபர, கலியுகம் ஆகிய நான்கில் இவன் கொள்கின்ற வெண்மை, சிகப்பு, பச்சை, கருமை ஆகிய நான்கையும் விளக்குவதாகும். (திருமலை ஒருமையானை) – திருவாய்மொழி (1-8-3) - கண் ஆவான் - என்று கூறுவது போல், திருமலையில் நித்யஸூரிகளுக்கும், நித்யஸம்ஸாரிகளுக்கும் ஒரே போன்று தனது திருமுகத்தைக் காட்டியபடி நிற்பவன். (தன்மையை நினைவார்) – இப்படியாக இவன் அடியார்களிடம் வசப்பட்டு நிற்கும் தன்மையை நினைக்கவல்லவர்கள். (என்றன் தலைமிசை மன்னுவாரே) – அவனது திருவடிகளும், இவ்விதம் நினைக்கவல்லவர்களின்

திருவடிகளும் எனது தலையில் ஒன்றாக இருப்பதில்லை. இவனைப் பற்றி எண்ணக் கூடியவர்களின் திருவடிகள் மட்டுமே என் தலையில் இருக்க வல்லவையாகும். பெரியதிருமொழி (7-4-1) – தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலைமேலார் - என்று கூறியது காண்க.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

திருமாலை

(பகுதி – 20)

வ்யாக்யானம் – (மதியிலா மானிடங்காள்) – த்ரீணி சதா த்ரீ ஸஹஸ்ராண்யக்நிம் த்ரிம்சச்ச தேவா நவ சாஸபர்யந் என்கிறபடியே ஆராத்யர் அநேகர் என்னுமிடம் ச்ருதி ஸித்தமன்றோ என்ன. (மதியிலா மானிடங்காள்) – வேதாந்த ஜ்ஞாநமில்லாதார் பாக்யஹீநரிறே. சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை, அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா, யே யஜந்தி பித்ரூந் தேவாந் என்கிற ச்ருதி ஸ்ம்ருதிகளில் ஜ்ஞாநமில்லாதாரிறே. அறிவுக்கு யோக்யதையுள்ள ஜந்மத்திலே ஜநித்து அறிவின்றிக்கே இருக்கிற பாக்யஹீநர்காள். ஆன்விடையேழன்றடர்த்தாற்காளானாரல்லாதார் மானிடவரல்லரென்று என் மனத்தே வைத்தேனே என்றும், செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன் என்றும், அஸந்நேவ ஸ பவதி என்றும் சொல்லக் கடவதிறே. தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோ அந்யதுக்தம் என்றும், ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு என்றும் வகுத்த விஷயத்தில் ஜ்ஞாநமே ஜ்ஞாநமாவது; அல்லாதவை அஜ்ஞாநஸமாநம். வித்யாந்யா சில்பநைபுணம் செருப்புக் குத்தக் கற்ற ஜ்ஞாநத்தோபாதியிறே இதர ஜ்ஞாநங்கள்.

விளக்கம் - (மதியிலா மானிடங்காள்) – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "ருக்வேதம் - த்ரீணி சதா த்ரீ ஸஹஸ்ராண்யக்நிம் த்ரிம்சச்ச தேவா நவ சாஸபர்யந் – மூவாயிரத்து முந்நூற்று முப்பதொன்பது தேவர்கள் சேர்ந்து அக்னிதேவனான எனக்குத் தொண்டு செய்தனர் – என்று கூறியதே. இது போன்று ஆராதிக்கப்பட வேண்டிய தேவர்கள் பலர் உள்ளனர் என்பது வேதங்களால் உணரப்படுகிறது அல்லவா?", என்று கேட்டனர். அதற்கு ஆழ்வார் பதில் கூறத் தொடங்குகிறார். (மதியிலா மானிடங்காள்) – வேதாந்த ஞானம் என்னும் செல்வம் இல்லாதவர்களே! கீழே உள்ள பல வரிகளைப் பற்றிய ஞானம் அற்றவர்களே!

- யஜுர்வேதம் - சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை – அனைத்து தேவதைகளும் பரமாத்மாவின் சரீரமாகவே உள்ளதால், அவற்றுக்குச் செய்யப்படும் கர்மங்கள் பெருமை அடைகின்றன.

- ஸ்ரீமத் பகவத் கீதை (9-24) - அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா – அனைத்து யஜ்ஞங்களையும் அனுபவிப்பவனாக நானே உள்ளேன்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (355-4) - யே யஜந்தி பித்ரூந் தேவாந் – யார் பித்ருக்களையும் தேவர்களையும் ஆராதிக்கின்றனரோ.....அவர்கள் விஷ்ணுவையே ஆராதிக்கின்றனர்.

சிறந்த அறிவு பெறுவதற்கு ஏற்ற மனிதப்பிறவியை அடைந்தும், அத்தகைய அறிவைப் பெறாமல் உள்ள மனிதர்களே! இப்படியாக எம்பெருமானைப் பற்றிய அறிவு இல்லாதவர்களை, இல்லாத பொருள்கள் என்றே கீழே உள்ள வரிகள் கூறுகின்றன அல்லவா?

- பெரிய திருமொழி (11-7-9) – ஆன்விடை ஏழு அன்று அடர்த்தாற்கு ஆளானார் அல்லாதார் மானிடவர் அல்லர் என்று என் மனத்தே வைத்தேனே – ஏழு காளைகளை அடக்கிய கண்ணனுக்கு வசப்படாதவர்களை மனிதர்களே அல்லர் என்று முடிவு செய்தேன்.

- இரண்டாம் திருவந்தாதி (44) - செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன் – தாமரை போன்ற அழகான கண்கள் கொண்ட எம்பெருமானை மறந்தவர்களை மனிதர்களாகவே கொள்ளவில்லை.

- தைத்திரீய ஆரண்யகம் - அஸந்நேவ ஸ பவதி – ப்ரஹ்மத்தை அறியவில்லை என்றால் இல்லாதவன் ஆகிறான்.

மேலும் நமது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி பகவத் விஷயத்தைக் குறித்த ஞானம் மட்டுமே ஞானம் எனப்படும். மற்ற அனைத்து ஞானங்களும் அஞ்ஞானம் என்றே கொள்ளப்படும். இதனைக் கீழே உள்ள பல வரிகளும் கூறுகின்றன:

- விஷ்ணுபுராணம் - தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோ அந்யதுக்தம் – தோஷம் அற்ற உயர்ந்த பொருள் எதனால் அடையப்படுகிறதோ அதுவே ஞானம் ஆகும்.

- முதல் திருவந்தாதி (67) - ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு.

விஷ்ணு புராணம் - வித்யாந்யா சில்பநைபுணம் – மற்ற வித்யைகள் செருப்புக்குச் சமம் – என்று கூறுவதற்கு ஏற்ப, எம்பெருமானைத் தவிர உள்ள மற்ற விஷயங்கள் குறித்த ஞானம் என்பது செருப்புக்குச் சமமே ஆகும்.

வ்யாக்யானம் – எங்களுக்கு அறிவில்லையாகில் அறிந்த நீர் அருளிச் செய்யமாட்டீரோ என்ன. (உற்றபோதன்றி நீங்கள் ஒருவனென்றுணரமாட்டீர்) – நான் சொன்னாலும், ப்ரளயம் வந்து கிட்டினபோது ஆச்ரயணீயரான தேவதைகளும் நீங்களும் ஒரு புகுவாசல் தேடித் திரியுமன்றல்லது ஸர்வாதிகன் ஒருவனுளன் என்று உங்கள் நெஞ்சில் படமாட்டாது. உங்களுக்கு ஆச்ரயணீயரான தேவதைகள், ராவணாதி கண்டகர் கையிலே நெருக்குண்டு கூப்பிடுமன்றிறே ரக்ஷகன் ஒருவனுண்டென்று உங்கள் நெஞ்சிலே படுவது என்றுமாம்.

விளக்கம் – ஆழ்வார் கூறியதைக் கேட்ட ஸம்ஸாரிகள், "எங்களுக்கு நீங்கள் கூறுவது போன்று அறிவில்லை. அதனால், பகவத் விஷயத்தைக் குறித்து நன்கு அறிந்த நீங்கள் எங்களுக்கு எடுத்து உரைக்கலாமே", என்றனர். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (உற்றபோது அன்றி நீங்கள் ஒருவன் என்று உணரமாட்டீர்) – நான் எத்தனை கூறினாலும் நீங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள். ப்ரளயம் காலத்தில் நீங்களும், உங்களால் ஆராதிக்கப்பட்ட தேவதைகளும் ஒன்றாகச் சேர்ந்து எம்பெருமானின் திருவாயில் புகும் காலம்வரை, "அனைத்தையும் ஆள்பவன் ஈடில்லாத அவன் ஒருவனே", என்று உணரமாட்டீர்கள். இதற்கு வேறு விதமாகவும் பொருள் கூறலாம். உங்களால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள் இராவணன் போன்ற அசுரர்களின் பிடியில் சிக்குண்டு, அவனைத் தங்கள் உதவிக்கு அழைக்கும்போதுதான், உங்கள் மனதில், "ரக்ஷகன் அவன் ஒருவனே", என்று தோன்றும்.

வ்யாக்யானம் – (ஒருவனென்றுணரமாட்டீர்) – தேவதாந்தரங்களை ஆராதிக்கிற நீங்கள் ஆபத்தசைகளை ஒழிந்தபோது அவர்களோபாதி இவனும் ஒருவன் என்று புத்தி பண்ணமாட்டிகோள். அபுநராவ்ருத்தி லக்ஷணமோக்ஷத்தைத் தரும் இவன் பக்கல், க்ஷுத்ர பலப்ரதரான தேவதைகள் பக்கல் பண்ணின ஆதரமன்றிக்கே இருக்கிறதிறே ஸம்ஸாரிகள் மதிகேடு.

விளக்கம் – (ஒருவன் என்று உணரமாட்டீர்) – இவனைத் தவிர மற்ற தேவதைகளை ஆராதிக்கும் நீங்கள், உங்களுக்கும் அந்தத் தேவதைகளுக்கும் ஆபத்து உண்டாகும்

காலம் வரும்வரை, அவர்களைப் போன்றே இவனும் தெய்வம் என்று அறியமாட்டீர்கள். இந்த உலகிற்கு மீண்டும் திரும்புதல் அல்லாத உயர்ந்த மோக்ஷம் அளிக்கும் இவனிடம், அற்பமான பலன்களை அளிக்கின்ற தாழ்ந்த தேவதைகளிடம் காட்டும் அன்பை வைக்காமல் உள்ளனரே! என்னே ஒரு மூடத்தனம்.

வ்யாக்யானம் – (அற்றமேலொன்றறியீர்) – அற்றம் = மறைபொருள். அறியாமைக்கு அடி அபிதாநவ்ருத்திக்கு மேற்பட தாத்பர்யவ்ருத்தி அறிகிலிகோள். வசஸாம் வாச்யமுத்தமம், வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:, நாராயணபரதேவதா: என்னக் கடவதிறே. (அவனையல்லால் தெய்வமில்லை) – அவனையொழிந்த தேவதைகளுடைய ஸத்பாவத்தை இல்லையென்கிறாரல்லர். ஈச்வரனுக்கு ப்ரகாரமாய்க் கொண்டு அத்தேவதைகளுமுளர். ஆச்ரயணீயரல்லரென்கிறார். “அவனை” என்று என்று மேற்சொல்லுகிற க்ருஷ்ணனை நினைக்கிறார்.

விளக்கம் – (அற்றம் மேல் ஒன்று அறியீர்) – அற்றம் என்றால் சாஸ்த்ரங்களில் மறைமுகமாகக் கூறப்பட்ட பொருள். நமது அறியாமைக்கு முக்கியமான காரணம் எது என்றால் – சாஸ்த்ரங்கள் மறைவாகக் கூறியுள்ள பொருளை அறியாமல், மேலோட்டமாக அறிவதே ஆகும். கீழே உள்ள பல வரிகளும் காண்க:

- ஜிதந்தே ஸ்தோத்ரம் - வசஸாம் வாச்யமுத்தமம் – அனைத்து சொற்களால் கூறப்பட்ட பொருளைக் காட்டிலும் மேலான பொருளாக உள்ள உன்னை.
- ஸ்ரீமத் பகவத் கீதை (15-15) - வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய: - அனைத்து வேதங்களாலும் நானே அறியப்படுகிறேன்.
- ஸ்ரீமத் பாகவதம் - நாராயணபரதேவதா: - வேதங்களை நாராயணனைக் கூறுகின்றன.

(அவனையல்லால் தெய்வமில்லை) – இவனுடைய தெய்வத்தன்மை போன்று மற்ற தேவதைகளுக்கு தெய்வத்தன்மை இல்லை; மற்ற தேவதைகள் இல்லை என்று இவர் கூறவில்லை. இவனுடைய சரீரங்களாக அவர்கள் உள்ளனர். அவர்கள் அண்டத் தகுந்தவர்கள் அல்லர். அடுத்து “அவனை” என்று மேலே கூறவுள்ள க்ருஷ்ணனை எண்ணுகிறார்.

வ்யாக்யானம் – "அவனை" என்று நீர் அருளிச்செய்கிறவனை இன்னானென்று விசேஷியீர், நாங்களாச்ரயிக்க என்ன (கற்றினம் மேய்த்த எந்தை கழலிணைப் பணிமின் நீரே) – என்கிறார். "க்ருஷ்ணன்" என்னாதே "கற்றினம் மேய்த்த" என்றது தேவதாந்தரங்களைப் போலே துராராதன்ன்றிக்கே ஸர்வஸுலபன் என்கைக்காக. பசு மேய்க்கை அயர்வறுமமரர்களதிபதியாயிருந்தத்தோடொக்கும். கன்று மேய்க்கையிலே யாய்த்துத் திருவுள்ளம் உகந்திருப்பது. ஸ்வரக்ஷணத்தில் குறைய நின்றார் பக்கலிலேயிறே திருவுள்ளம் மண்டியிருப்பது. "திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி" என்கிறபடியே பசு மேய்க்கையில் உகப்பு. கன்றுகளை மேய்க்குமிடத்தில் இனிதுகந்திருக்கும். கற்று – கன்று. (எந்தை) – நான் அகப்பட்ட துறையிலே நீங்களும் அகப்படப் பாருங்கோள். (கழலிணை பணிமினீரே) – அச்செயலுக்குத் தோற்று குணைர்தாஸ்யமுபாகத: என்கிறபடியே நான் அவன் திருவடிகளிலே விழுந்தேன், நீங்களும் அப்படியே ஆச்ரயியுங்கோள். தான் சிறியனாய் நின்ற நிலையில் தன்னை ஆச்ரயித்தாரைப் பொறுப்பிக்குமவனை ஆச்ரயியுங்கோள். யயாதி இந்த்ரனோடே ஏகாஸநத்திலிருந்தவளவிலே, "கர்ம பூமியிலே புண்யக்ருத்துக்களாய்ப் போருவார் ஆரோ?", என்ன; அஸத்யம் சொல்லலாகாதென்னும் நினைவாலே, "நான் வர்த்திக்கிற நாளிலே என்னைச் சொல்லுவார்கள்", என்ன; ஏகாஸநத்திலிருந்தது பொறாமையாலே, "ஆத்மப்ரசம்ஸை பண்ணினாய்", என்று த்வம்ஸ என்று தலைகீழ்ப்படத் தள்ளினான் என்று உண்டாயிருந்தது. "வேதோப ப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான மஹாபாரதத்தில், இது என்ன வேதார்த்தம் சொல்லுகிறது என்று குறைப்பட்டிருக்கும்", என்ன; "அவனே ஆச்ரயணீயனென்னும் இவ்வர்த்தம் சொல்லுகிறது", என்று அருளிச் செய்தார்.

விளக்கம் – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "நீங்கள் அவனை என்று கூறுகிறீர்கள். அவனை யார் என்று தெளிவாகக் கூறினால் நாங்கள் அண்டலாம் அல்லவா?", என்றனர். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (கற்றினம் மேய்த்த எந்தை கழலிணைப் பணிமின் நீரே) – என்று கூறினார். "க்ருஷ்ணன்" என்று நேரடியாகச் சொல்லாமல், "கற்றினம் மேய்த்த" என்று ஏன் கூறினார்? காரணம் – மற்ற தேவதைகள் போன்று இவன் ஆராதனை செய்வதற்குக் கடுமையானவன் அல்லன், மிகவும் சுலபமாக இவனை ஆராதிக்கலாம் – என்று உணர்த்தவே ஆகும். நித்யஸூரிகளின் அதிபதியாக இவன் உள்ளபோதும், அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளும் திறன் படைத்தவர்கள் என்பதால், அவர்கள் மீது அதிகம் ஈடுபடுவதில்லை. இது போன்று பசுக்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் திறன் உள்ளதால், அவற்றைப் பற்றி இவன் கவலைப்படுவதில்லை. ஆனால், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் திறன் இல்லாத கன்றுக்குட்டிகளிடமே இவன் மிகுந்த பரிவுடன் உள்ளான். ஆக தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் திறன் இல்லாதவர்களிடமே இவனுக்குப் பரிவு உள்ளது. திருவாய்மொழியில் (10-

3-10) – திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி – என்று பரமபதத்தில் உள்ளதைக் காட்டிலும் பசு மேய்ப்பதில் இவனுக்கு மகிழ்ச்சி அதிகம் – என்றது காண்க. கன்றுகளை மேய்ப்பதில் இவன் மிகவும் இன்பமாக இருப்பான். கற்று என்றால் கன்று எனப் பொருள். (எந்தை) – நான் சென்று அகப்பட்டுக் கொண்ட இந்த க்ருஷ்ணாவதாரத்தில் நீங்களும் அகப்பட முயற்சி செய்யுங்கள். (கழலிணை பணிமின் நீரே) – இராமாயணம் – குணைர்தாஸ்யம் உபாகத: - இராமனின் குணங்களுக்கு அடிமைப்பட்டேன் – என்று கூறுவது போன்று, நான் க்ருஷ்ணனின் செயல்களில் சிக்குண்டு, அவன் திருவடிகளில் விழுந்தேன். நீங்களும் இது போன்றே செய்யுங்கள். தனது அவதாரத்திற்கு ஏற்ப, எத்தனை தாழ்வாக நின்றாலும், தன்னை அண்டியவர்களுக்கு தன்னை ஒத்த மேன்மைகளை அளிக்கும் கண்ணனைப் பற்றுங்கள்.

மஹாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சி உள்ளது – தனது தவபலம் காரணமாக யயாதி என்னும் சக்ரவர்த்தி தேவலோகம் சென்று, இந்த்ரனுக்குச் சமமான ஆசனத்தில் அமர்ந்தான். இது இந்த்ரனுக்குப் பொறுக்கவில்லை. இவனைத் தள்ள முடிவு செய்தான். இந்த்ரன் அவனிடம், “பூமியில் அதிகமான புண்ணியம் செய்தவர் யார்?”, என்றான். உண்மையைத் தவிர வேறு எதனையும் கூறக்கூடாது என்று எண்ணிய யயாதி இந்த்ரனிடம், “நான் அங்குள்ள காலத்தில் என்னை அப்படிக் கூறினார்கள்”, என்றான். இதனைக் கேட்ட இந்த்ரன், “உனது சுயபெருமையைப் போற்றியதால் கீழே விழுவாய்”, என்று கூறியபடி அவனைத் தலைகீழாகப் பூமியில் தள்ளினான். பட்டரிடம் நஞ்சீயர், “வேதங்களின் ஆழ்பொருளை விளக்கவல்ல மஹாபாரதத்தில் உள்ள இந்த நிகழ்வு, எத்தகைய பொருளை விளக்குவதாக உள்ளது. இதன் பொருளை அறியவேண்டும் என்ற குறை எனக்கு நீண்ட நாட்களாக உள்ளது”, என்றார். உடனே பட்டர், “இந்த்ரன் போன்ற தேவதைகள் தனக்கு மேல் யாரும் செல்வதை விரும்புவதில்லை என்பதை இது காட்டுகிறது. இப்படிப்பட்ட தன்மையற்றவனும், தனக்கு நிகராக மேன்மை அளிக்கும் பண்பு கொண்டவனும் ஆகிய எம்பெருமானே அண்டத் தகுந்தவன் என்பதையும் இது காட்டுகிறது”, என்று அருளிச் செய்தார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்